DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.95/2021

Prosecution side witness for P.W.7

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. சுடலைகனி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.01.2026**

Accused Present.

முதல்விசாரணை:–

நான் கடந்த 11 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், உசரத்து குடியிருப்பு பிரமாணவிளை இசக்கியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் பனையேறும்தொழில் செய்து வருகிறார். 16.08.2020 அன்று நானும், மணிராஜ் என்பவரும் இந்த வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கு பக்கத்து வீடு என்பதால் அங்கு நின்று கொண்டிருந்தோம். அங்கு சாத்தான்குளம் காவல்நிலைய ஆய்வாளர் தட்டார்மடம் பொறுப்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து அந்த இடத்தை சுற்றி பார்த்து எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு எழுதிய பார்வைமகசரில் நானும், மணிராஜ் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த பார்வைமகசர் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 3** ஆகும். அந்த பார்வைமகசரில் மணிராஜ் என்பவர் முதலாவதாக கையெழுத்து செய்துள்ளார். அந்த இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண்ணையும், இரத்தம்படியாத மண்ணையும் 2 கவரில் எடுத்தார்கள். அதை கைப்பற்றியதற்கு அத்தாட்சி பிறப்பித்து எழுதிக்கொண்டார்கள். அதிலும் நானும், மணிராஜ் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 4** ஆகும். அந்த அத்தாட்சியில் மணிராஜ் என்பவர் முதலாவதாக கையெழுத்து செய்துள்ளார். ஆய்வாளர் கைப்பற்றிய பொருட்களை நீதிமன்றத்தில் காண்பித்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்த பொருட்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தம்பட்ட மண் கொஞ்சம் (சொத்துப்பட்டியல் வரிசை

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.05 19:41:58 +0530

எண்.3 ல் உள்ளது) **அ.சா.பொ.5** ஆகும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தம்படாத மண் கொஞ்சம் (சொத்துப்பட்டியல் வரிசை எண்.4 ல் உள்ளது) **அ.சா.பொ.6** ஆகும், இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் நீதிமன்ற புறக்கணிப்பு செய்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.05 19:42:03 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.95/2021

Prosecution side witness for P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சுடலைமணி** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.01.2026**

Accused Present.

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், உசரத்து குடியிருப்பு மெயின்ரோட்டில் பள்ளிகூடத்திற்கு அருகே குடியிருந்து வருகிறேன். நான் பனையேறும்தொழில் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன துரைராஜ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் துரைராஜின் மகன் ஆவார். துரைராஜ்க்கு 2 பையன்கள் உண்டு. மற்றொரு மகனையும் தெரியும். கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊர் அம்மன்கோவில் பக்கம் வைத்து காவல்நிலைய போலீசார் துரை இறந்துபோனது வழக்கு சம்மந்தமாக எங்கள் ஊருக்கு வந்தார்கள். வந்தவர்கள் சாட்சிக்காக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் போட்டுக்கொடுத்தேன். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். எதிரி சிவா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ 5** ஆகும். எதிரி ஜெகன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ 6** ஆகும். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில் எதிரி வீட்டிலிருந்து எடுத்துக்கொடுத்ததாக உள்ள பொருட்களை கைப்பற்றிய அத்தாட்சிகளில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். எதிரி சிவா என்பவர் எடுத்துக்கொடுத்த பொருளை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ–7** ஆகும். எதிரி ஜெகன் என்பவர்

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.05 19:42:09 +0530

எடுத்துக்கொடுத்த பொருளை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ–8** ஆகும். எதிரிகளை கைது செய்யும்போதோ, அவர்கள் பொருட்களை எடுத்து கொடுக்கும்போதோ நான் உடன் இருக்கவில்லை. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கும்போது என்னை விசாரித்தார்கள். அப்போதும் இப்படித்தான் சொல்லியுள்ளேன். வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 17.08.2020 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பை கவனிக்கும் சாத்தான்குளம் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் நானும், கணேசன் என்பவரும் பிரமாணவிளை மேலத்தெருவில் உள்ள செல்வம் என்பவரது வீட்டிற்கு சென்றபோது அந்த வீட்டினுள் மறைந்து இருந்த ஆஜர் எதிரி சிவா மற்றும் அவரது அண்ணன் ஜெகன் ஆகியோர்களை போலீசார் கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரித்தார்கள் என்றும், அவ்வாறு விசாரிக்கும்போது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் தன் தந்தையாரை கொலை செய்த விவரத்தை தெரிவித்துவிட்டு தன் தகப்பனாரை கொலை செய்ய பயன்படுத்திய உடை மர கம்பை தன் வீட்டின் முன்பு அடுக்கி வைத்துள்ள உடை முள் விறகுகளுக்கு இடையிலிருந்து எதிரிகள் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றும், அந்த கம்புகளை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சிகளில்தான் நானும், கணேசனும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகள் சொல்ல சொல்ல ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மடிக்கணினியில் டைப் செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலங்களிலும் நானும், கணேசனும் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், அவர்களது அம்மாவை எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் அவரது அம்மா கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

BREETHA M
Digitally signed by BREETHA M
Date: 2026.01.05 19:42:17 +0530

எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் நீதிமன்ற புறக்கணிப்பு செய்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.05 19:42:22 +0530